<u>வேலூர்–மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., எண்:142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்–9</u>

| |
|---|
| பால் சேகர வழித்தடங்களில் வாகனங்கள் இயக்க ஒப்பந்தம்<br>( RMC/BMC )<br>தொழில்நுட்ப படிவம்- A<br>(Technical Bid) |

# டெண்டர் நாள்: 24.5.2022

இப்படிவம் திரு. / திருமதி ______________________ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

வரைவோலை எண் : நாள்:

## ஒப்பந்ததாரர் டெண்டர்பாரம் பூர்த்தி செய்யப்படும் போது கவனிக்கப்பட வேண்டியவை

# கவர் A

தொழில் நுட்ப படிவம் (Technical Bid) (2022-24)

டெண்டரின் தொழில்நுட்ப படிவத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். டெண்டர் கவரின்மேல் வழித்தடத்தின் பெயர் மற்றும் அலுவலக முகவரி முதலியவற்றை கவனமாக குறிப்பிடப்பட வேண்டும்.

1. டேவணித்தொகை செலுத்திய விபரம் – டிடி ஒரிஜினல்
2. புகைப்படம் – டெண்டர்தாரரின் புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்.
3. ஆர்.சி. புத்தகம் – நகல்
4. இன்சூரன்ஸ் சான்று – நகல்
5. பெர்மிட் – நகல்
6. சாலை வரி – நகல்
7. எஃப்.சி விபரம் – நகல்

இவற்றில் ஏதேனும் இணைக்கப்படவில்லை என்றாலோ அல்லது மாற்றி இணைக்கப்பட்டிருந்தாலோ கண்டிப்பாக தொழில்நுட்ப படிவ நிலையிலேயே டெண்டர் தகுதி இழந்து விடும்.

# தொழில் நுட்ப விபரப் படிவம்

# (Technical Bid)

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்ததாரர் பெயர்,விலாசம்<br>தொலைபேசி எண். | |
| 2 | டேவணித் தொகை செலுத்திய விபரம்: | |
| | அ)வரைவோலை எண். | |
| | ஆ)வங்கியின் பெயர் | |
| | இ)சலான் எண் | |
| | ஈ)தேதி | |
| 3 | டெண்டர் மேற்கொள்ளும் தடத்தின் பெயர் | |
| 4 | வண்டியின் விபரம் | |
| 5 | வண்டியின் பதிவு எண். | |
| 6 | வண்டி தயாரிக்கப்பட்ட வருடம் மற்றும்<br>மாடல் | |
| 7 | எஞ்சின் எண் | |
| 8 | சேசிஸ் எண். | |
| 9 | கொள்ளளவு | |
| | அ)பளுவுடன் | |
| | ஆ)பளு இல்லாமல் | |
| 10 | காப்பீடு விபரம் (Insurance) | |

| | | |
|---|---|---|
| 11 | சாலை வரி செலுத்திய தேதி விபரம் | |
| 12 | வண்டியின் உரிமம் எதுவரை<br>பெறப்பட்டுள்ளது ( Permit) | |
| 13 | காலாவதியாகும் தேதி விபரம் | |
| 14 | தகுதிச் சான்றிதழ் எந்த தேதி வரை<br>(F.C.) பெறப்பட்டுள்ளது | |

குறிப்பு:- ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களை **EPF & ESI** திட்டத்தில் சேர்த்து, மாதாந்திர **Premium** தொகையினை ஒப்பந்ததாரரின் **EPF / EDLI / ESI** திட்டத்தில் ஒதுக்கப்பட்ட கணக்கில் மாதாந்திர பிரிமியம் தொகையினை **SBI** வங்கியில் செலுத்தியதற்கான ரசீதினை மாதந்தோறும் **(2nd Fortnight)** போக்குவரத்து கட்டண பட்டியல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகுதான் போக்குவரத்துப் பட்டியல்கள் விடுவிக்கப்படும். **EPF & ESI** செலுத்தியதற்கான ரசீதினை சமர்ப்பிக்கப்படவில்லையெனில் போக்குவரத்து பட்டியல்கள் விடுவிக்கப்படமாட்டாது.

❖ போக்குவரத்து வாடகை கட்டணம் குறிப்பிடப்படும் போது ஒரு கி.மீ.க்கு என (சுங்க வரியும் (**Toll Fee**) சேர்த்து) குறிப்பிட வேண்டும். சுங்கவரி தனியாக வழங்கப்படமாட்டாது.

<u>இத்துடன் இணைக்கப்பட வேண்டியவை:-</u>

1. ஆர்.சி. புத்தகம் சிராகஸ்
2. இன்சூரன்ஸ் சான்று
3. பெர்மிட்( Permit)
4. சாலை வரி
5. FC. விவரம்
6. டேவணித் தொகை செலுத்திய சலான்

டெண்டர்தாரர் கையொப்பம்

புதியது – தூயது – சுகாதாரமானது

வேலூர்–மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., எண்: 142,
ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்–9

பால் சேகர வழித்தடங்களில் வாகனம் இயக்க ஒப்பந்தம்,
(RMC/BMC)
வணிக படிவம்– B (Commercial Bid)

# டெண்டர் நாள்: 24.5.2022

இப்படிவம் திரு. / திருமதி ______________________ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

வரைவோலை எண் : நாள்:

<u>வேலூர்–மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., எண்:142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர்– 9</u>

<u>பால் சேகர வழித்தடம்(RMC/BMC)</u>

<u>(Commercial Bid) டெண்டர் – (2022-2024)</u>

## டெண்டர் நாள்: 24.5.2022

| | | |
|---|---|---|
| 1. | டெண்டர்தாரரின் பெயரும் முகவரியும் : (தொலைபேசி எண்ணும்) | |
| 2. | டெண்டர் மேற்கொள்ளும் தடத்தின் பெயர்: | |
| 3. | டெண்டர் கோரும் வழித்தடத்தின் தூரம் கி.மீ. | |
| 4. | ஒரு கிலோ மீட்டருக்கான விலைப்புள்ளி (சுங்கவரி உட்பட) | ரூ. பை.<br>எழுத்தால்(------------------------------------------<br>--------------------------------------------------) |
| 5. | டெண்டர் விதிகளை ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டுள்ளேன். | |

குறிப்பு . எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்ட விலைப்புள்ளியில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் இதில் எது குறைவானதோ அதுவே பரசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

## 2022- 24 இரு ஆண்டிற்கு ஒளிவு மறைவற்ற முறையில் மறு ஒப்பந்தம் கோரும் பால் சேகர வழிதடங்கள் விவரங்கள்:

| எண். | தடத்தின் பெயர் | தூரம் (கி.மீ.) (தினசரி காலை மாலை இரு வேளை) | கொள்ளளவு (டன்) | வண்டி மாடல் |
|---|---|---|---|---|
| கொடக்கல் பால் சேகர வழித்தடம் (RMC) | | | | 2014 மற்றும் அதற்கு மேல் |
| 1 | இராமபுரம் | தினசரி-110 | 1-2 | |
| 2 | சோளிங்கர் ரூட்-1<br>ரூட்-2 (காலை மட்டும்) | தினசரி-26<br>தினசரி-13 | 5-6<br>2-3 | |
| வேலூர் பால் சேகர வழித்தடம் (RMC) | | | | |
| 1 | தாதிரெட்டிபள்ளி | தினசரி-88 | 1-2 | |

**2022- 24 இரு ஆண்டிற்கு ஒளிவு மறைவற்ற முறையில் புதிய ஒப்பந்தம் கோரும் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய பால்சேகர வழித்தடங்களின் விவரங்கள்:**

| வ. எண். | வழித்ஂத்தின் பெயர் | தூரம் (கி.மீ.) (தினசரி காலை மாலை இரு வேளையும்) | கொள்ளளவு (டன்) | வண்டி மாடல் |
|---|---|---|---|---|
| 1 | முத்துகுமரன்மலை | தினசரி-58 | 2.00 – 3.5 | 2014 மற்றும் அதற்கு மேல் |
| 2 | சிவநாதபுரம் | தினசரி-70 | 0.650 – 1.50 | |
| 3 | கம்மவான்பேட்டை | தினசரி-28 | 0.650 – 1.50 | |
| 4 | வேலங்காடு | தினசரி-62 | 0.650 – 1.50 | |
| 5 | முக்குன்றம் | தினசரி-124 | 0.650 – 1.50 | |
| 6 | பசுமாத்தூர் 1 | தினசரி-80 | 0.650 – 1.50 | |
| 7 | பசுமாத்தூர் 2 | தினசரி-40 | 0.650 – 1.50 | |
| 8 | திருமணி 1 | தினசரி-88 | 0.650 – 1.50 | |
| 9 | திருமணி 2 | தினசரி-76 | 0.650 – 1.50 | |
| 10 | மேல்பாடி 1 | தினசரி-90 | 0.650 – 1.50 | |
| 11 | மேல்பாடி 2 | தினசரி-62 | 0.650 – 1.50 | |
| 12 | கீழ்அரசம்பட்டு 1 | தினசரி-90 | 0.650 – 1.50 | |
| 13 | கீழ்அரசம்பட்டு 2 | தினசரி-70 | 0.650 – 1.50 | |
| 14 | பரதராமி 1 | தினசரி-44 | 0.650 – 1.50 | |
| 15 | பரதராமி 2 | தினசரி-50 | 0.650 – 1.50 | |
| 16 | ஜமால்புரம் | தினசரி-74 | 0.650 – 1.50 | |
| 17 | காட்ரம்பாக்கம் 1 | தினசரி-136 | 0.650 – 1.00 | |
| 18 | காட்ரம்பாக்கம் 2 | தினசரி- 74 | 1.50 – 2.00 | |
| 19 | கே. வேலூர் | தினசரி-62 | 1.00 – 1.50 | |
| 0 | காவனூர் | தினசரி-72 | 0.650 – 1.00 | |
| 21 | ஆற்காடு பரதராமி 1 | தினசரி- 104 | 0.650 – 1.00 | |
| 22 | ஆற்காடு பரதராமி 2 | தினசரி-80 | 1.00 – 1.50 | |
| 23 | பரதராமி 3 | தினசரி-46 | 1.50 – 2.00 | |
| 24 | பரதராமி 4 | தினசரி-76 | 1.00 – 1.50 | |
| 25 | தாமரைப்பாக்கம் | தினசரி-42 | 1-1.5 | |
| 26 | முத்தனப்பல்லி | தினசரி– 82 | 2.5 - 3 | |
| 27 | பொன்னேரி | தினசரி -60 | 1.5 - 2 | |
| 28 | மேல்ரசம்பட்டு | தினசரி-66 | 2 – 2.5 | |
| 29 | சின்னப்பள்ளிகுப்பம் | தினசரி -70 | 1.5 - 2 | |
| 30 | கொடையாஞ்சி | தினசரி -16 | 0.650 - 1 | |
| 31 | புலவர்பள்ளி | தினசரி -98 | 1.5 -2 | |
| 32 | கிருஷ்ணம்பள்ளி | தினசரி -110 | 1.5 -2 | |
| 33 | நாட்றம்பள்ளி | தினசரி -36 | 1.5 - 2 | |
| 34 | பார்சனாம்பள்ளி | தினசரி -106 | 0.650 - 1 | |
| 35 | மின்னூர் | தினசரி -84 | 0.650 -1 | |
| 35 | கொண்டநாயக்கன்பட்டி | தினசரி -104 | 1 – 1.5 | |
| 36 | பதிபள்ளம் மோட்டூர் | தினசரி – 16 | 0.650 - 1 | |

**2022 முதல் 2024 வரையிலான இரு ஆண்டு காலத்திற்கு கிராமப்புற சங்கங்களிலிருந்து பாலை சேகரம் செய்து அருகில் உள்ள மத்திய பால்பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் கொண்டு சேர்க்கும் வாகன ஒப்பந்தத்திற்கு கால வரையறைகளும் நிபந்தனைகளும் :**

1. ஒப்பந்தக் காலம் 2022 முதல் 2024 வரை இரண்டு ஆண்டு ஆகும். மறு வாகன ஒப்பந்தம் இறுதி செய்யும் வரை அல்லது ஆறு மாதம் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை மேற்படி ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

2. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட தனது ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனி ரூ.11/– (ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி இவ்வொன்றியத்தின் இணை உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும். (இத்தொகை திருப்பித் தரத்தக்கது அல்ல.)அவர் இவ்வொன்றிய தேர்தலில் வாக்கு அளிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ உரிமை இல்லை.

3. ஒப்பந்ததாரர், ஒப்பந்தம் வழங்கப்பட்ட 10 தினங்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியாக ரூ. 80/– (ரூபாய் எண்பது மட்டும்) மதிப்பிற்கான பத்திரத்தில் ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர், ஒப்பந்தப் பத்திரம் கொடுத்த பின்னரே முதல் போக்குவரத்துப் பட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

4. ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகை ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகும். ஒப்பந்த அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஒவ்வொரு தடத்திற்கும் தனித் தனியே பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் படிவத்துடன் பொது மேலாளர் வே.மா.கூ.பா.உ.ஒன்றியம் பெயரில் ரூ. 6,000/– முன்வைப்புத் தொகையும் மீதியுள்ள தொகை ரூ. 14,000/– ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் கேட்பு வரைவோலை (Demand Draft ) மூலமாக ஒன்றியத்தில் செலுத்த வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**5.** பிணை வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் தரப்பட மாட்டாது.

**6.** ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒப்பந்த சட்ட திட்டங்களை (Terms and conditions) முழுமையாகவோ, ஏதாவது ஒரு விதியையோ பின்பற்றத் தவறி அதனால் ஒன்றியத்திற்கு இழப்புகள் ஏற்பட்டால் பிணை வைப்புத் தொகை முழுமையாக முடக்கப்பட்டு திரும்ப வழங்கப்பட மாட்டாது.

**7.** ஒப்பந்த வாகனமும் அதில் பணிபுரியும் ஊழியர்களும் மோட்டார் வாகனச் சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு இருக்க வேண்டும்.

**8.** <u>பால் சேகரம் செய்யும் ஒப்பந்த வாகனம் பற்றிய முழுத் தகவல்கள்:</u>

அ. ஒப்பந்த வாகனம், டெண்டர் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கொள்திறனுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஆ. ஒப்பந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம் மோட்டார் வாகனக் காப்பீட்டுச் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக் காலத்திற்கு முழு காப்பீடு செய்திருக்க வேண்டும்.

இ. ஒப்பந்த வாகனம், தரமான தார்பாலின் அல்லது ஒரு இலகு உலோகத்தால் முழுமையாக மூடப்பட்டு பால் கேன்கள் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாப்பு அளிக்கவுள்ளதாக இருக்க வேண்டும். மேல் பாகம் மூடப்படாத வாகனத்திற்கு ஒரு நாளைக்கு 100/– வீதம் தண்டத் தொகை விதிக்க பொது மேலாளருக்கு அதிகாரமுண்டு.

ஈ. வாகனத்தில் பால் ஏற்றவோ அல்லது இறக்கவோ ஏதுவாக வாகனத்தின் உள்புறம் விளக்கு பொருத்தப் பட்டிருக்க வேண்டும்.

**9.** ஒப்பந்ததாரர், நிர்வாகக் காரணங்களுக்கேற்ப அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழித்தடத்தின் கால, தூர அட்டவணைகளைத் தவறாது பின்பற்ற வேண்டும். இது போன்ற மாற்றங்களைப் பின்பற்றும் பொருட்டுத் தேவையான கால அவகாசம் அளிக்கப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**10.** ஒப்பந்ததாரர், காலை, மாலை இரு வேளைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்திலுள்ள சங்கங்களிலிருந்து பாலை சேகரம் செய்து, அவ்வழித்தடம் இணைக்கப்பட்டுள்ள மத்திய பால் பண்ணை அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அல்லது தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்திற்கு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட கால வரையறைக்குள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

**11.** ஒப்பந்ததாரர் பால்பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தில் இருந்து இரு வேளைகளிலும் காலி கேன்களை பெற்று சங்கங்களுக்கு வழங்கவேண்டும்.

**12.** ஒப்பந்ததாரர் வாகனத்தில் மத்திய பால்பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தில் இருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் கால்நடைத் தீவனம், கன்று வளர்ப்புத் தீவனம், தீவனப் புற்கரணைகள், பண்டகசாலை பொருட்கள், பால் பரிசோதனைக் கருவிகள், டீப்பால், ஆசிட், அமைல் ஆல்கஹால், கம்ப்யூடர் பில், டிரக் ஸ்லிப், போன்ற அனைத்தையும் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி சங்கப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அது போல சங்கங்களிடமிருந்து அனுப்பப்படும் அலுவலகத் தொடர்பான அனைத்து பொருள்களையும் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி ஏற்றி வரவேண்டும்.

**13.** ஒப்பந்த வாகனத்தில் பால் கேன்களுடன் பயணிகள், கால்நடைகள் அல்லது மற்ற பொருட்களை ஏற்றிச் செல்லக் கூடாது. அவ்வாறு ஏற்றிச் செல்வது தெரிய வந்தால், அந்த நேரத்திற்கான (Shift) போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

**14.** வாகனத்தின் துப்புரவாளர் எப்போதும் வாகனத்தின் பின்புறத்தில்தான் இருக்க வேண்டும். வாகனம் இயக்கப்படும்போது ஓட்டுநர் மற்றும் துப்புரவாளர், புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற ஒழுங்கீனங்கள் ஒன்றியத்தின் கவனத்திற்கு வரும் போது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**15.** ஒப்பந்ததாரர் காலதூர அட்டவணைப்படி சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நேரம் கடந்து நிலையத்திற்குச் சென்று பால் கெட்டு போனாலோ அல்லது சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய தவறினாலோ கீழ்க்கண்டவாறு வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

அ. ஒப்பந்த வாகனம் நிலையத்திற்கு தாமதமாக வந்து அதனால் பால் கெட்டு விட்டால் அதன் மொத்த கிரயத் தொகை போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

ஆ. ஒப்பந்த வாகனம் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிலையத்தைச் சென்றடைந்தாலும் மேற்புறம் மூடப்படாமல் இருந்து பால் கெட்டுப் விட்டால் அதற்குரிய இழப்புத் தொகை போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

இ. சங்கங்களிலிருந்து பால் சேகரம் செய்யாமல் வரும் பட்சத்தில், முந்தைய வேளையில் அந்த சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் இரண்டு மடங்கு பிடித்தம் செய்து அச்சங்கங்களுக்கு வழங்கப்படும்.

ஈ. பாலை வண்டியில் ஏற்றும் போதும், இறக்கும் போதும், போக்குவரத்திலும் சிந்தி விட்டால் அதன் கிரயத் தொகை போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும்.

**16.** பால் பண்ணை / குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தில் மின்தடை, இயந்திரக் கோளாறு போன்ற பல்வேறு காரணங்களால் தடை ஏற்பட்டால், நிலைய அதிகாரியின் உத்தரவின்படி அவர் சொல்லுமிடத்தில் பாலை கொண்டு சேர்க்க வேண்டும்.

**17.** ஒப்பந்த வாகனம் பழுதடைந்து பாலை சேகரம் செய்ய முடியாத நேரத்தில் சங்கமோ அல்லது ஒன்றியமோ ஏற்பாடு செய்த மாற்று வாகனத்தில் கொண்டு செல்லப்படும் பால் கெட்டு விட்டாலோ அல்லது வேறுவிதத்தில் இழப்பு ஏற்பட்டாலோ அதற்குண்டான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

**18.** ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கும் வாகனத்தில் அனுப்பப்படும் கேன்கள் மற்றும் கேன் மூடிகளுக்கு முறையான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும். ஏதேனும் குறைவு ஏற்பட்டால் அதற்கான இழப்புத் தொகை போக்குவரத்து பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

டெண்டர்தாரர் கைெ யாப்பம்

**19.** ஒப்பந்த காலத்தில் பால் கேன்களோ அல்லது கேன் மூடிகளைத் தொலைத்து விட்டால் அவற்றின் கிரயத் தொகை எதிர் வரும் போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

**20.** பால் கேன்கள் சங்கங்களிடமிருந்து ஏற்றப்படும் போதும், பால் பண்ணை / குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தில் இறக்கப்படும் போதும், போக்குவரத்திலும் பால் கேன்கள் மற்றும் மூடிகளுக்கு சேதாரம் ஏற்படின், அதற்கான இழப்புத்தொகை போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

**21.** ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட வாகனம் பழுதடைந்தால் தன் சொந்த பொறுப்பில் மாற்றுவாகனம் இயக்க வேண்டும். அதற்காக கூடுதல் கட்டணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

22. ஒப்பந்ததாரர் அங்கீரிக்கப்பட்ட வாகனத்தை மட்டும் தான் இயக்க வேண்டும். முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட மாட்டாது. முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்கப்படுமாயின் நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் அபராதத் தொகை வசூலிக்கப்படும். தவிர்க்க இயலாத காரணங்களான விபத்து, தகுதிச் சான்று பெறுதல் போன்ற சமயங்களில் ஒன்றியப் பொது மேலாளரின் முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்படும்.

23.முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட்டாலும் இதர நிபந்தனைகள் பொருந்தும். மாற்று வாகனம் இயக்க அதிக பட்சமாக 30 நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

24. ஒப்பந்ததாரர் அங்கீகரிக்கப்பட்டுள்ள வாகன கொள்திறனுக்கு குறைவான கொள்திறன் கொண்ட வாகனத்தை இயக்கினால் அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து கட்டணத்தில் 20% தண்டத் தொகையாக விதிக்கப்பட்டு போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும். தொடர்ந்து கொள்திறனுக்கு குறைவான வாகனத்தினை இயக்கி வந்தால் ஒப்பந்தம் இரத்து செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

25..மாற்று வாகனம் அல்லது மாற்று ஏற்பாடாக கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படும்.

அ. ஒப்பந்த வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் அவருடைய பெயரில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு மற்றும் மாடல் உள்ள மாற்று வாகனம் ஒன்றிய அனுமதி பெற்று இயக்க அனுமதி வழங்கப்படும்.

ஆ. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் இறக்கும் பட்சத்தில் அவரின் சட்டபூர்வமான வாரிசுதாரர் வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதிக்கப்படும்.

இ. இயக்கப்படும் வாகனம் ஒப்பந்ததாரரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரின் பெயரில் இருக்க வேண்டும்.

**26.** ஒப்பந்த வாகனம், விபத்து ஏற்பட்டு இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின், வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அத்தாட்சிக் கடிதம் பெற்று ஆர்.சி., தமிழ்நாடு பர்மிட் மற்றும் இன்சூரன்ஸ் தனது பெயரில் இருப்பின் அங்கீரிக்கப்பட்ட கொள்ளளவு உடைய மாற்று வாகனத்தை ஒன்றியத்தின் முன் அனுமதியுடன் இயக்கலாம்.

**27.** வாகன டிரிப் ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிகார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும். ஒன்றியம் எந்த பொறுப்பையும் ஏற்காது.

**28.** இந்திய வருமான வரி சட்டப்படி ஒவ்வொரு போக்குவரத்து கட்டண பில்லிலும் வருமான வரி பிடித்தம் செய்யாமல் இருக்க PANCARD அவசியம் சமர்ப்பிக்க வேண்டும். வாகன ஒப்பந்ததாரர் விண்ணப்பிக்கும்போது அத்தடத்தில் தேசிய நெடுஞ்சாலை சுங்கவரிக் கட்டணம் இருக்குமாயின் அதற்கான கட்டணத்தை விலைப்புள்ளியுடன் சேர்த்து அளிக்கப்பட வேண்டும்

**29.** போக்குவரத்து கட்டணப்பட்டியல் 15 நாட்களுக்குள் உரிய படிவத்தில் 3 நகல்களாக 5 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு 5 தினங்களுக்குள் பெறப்படும் பட்டியல் அடுத்துவரும் 15 தினங்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும். தாமதமாக கொடுக்கப்படும் பட்டியல்கள் காலம் தாழ்த்தி பட்டுவாடா செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**30. பாலினை கேன்களில் சங்கங்களிலிருந்து பெற்று மத்திய** , பால் பண்ணை / குளிரூட்டும் நிலையம் / தொகுப்பு பால் குளிர்விப்பு மைய **நிலையங்களுக்கு எடுத்து செல்லும் பொழுது, கலப்படம் செய்வது நிரூபிக்கப்பட்டால் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்வதுடன், கிரிமினல் வழக்கு தொடரப்படும்.**

31. ஒப்பந்ததாரர், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பொது மேலாளர் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விதிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

32. ஒப்பந்தக்காலம் முடிவடைந்ததுடன் ஒப்பந்தம் சார்ந்துள்ள அலுவலரிடம், பாக்கியில்லா சான்றுகள் (No Due Certificate) அளித்த பின்னர் கடைசி போக்குவரத்து பட்டியல் விடுவிக்கப்படும். மேலும், ஆறு மாதம் கழித்த பின்பு ஈட்டுறுதி பிணைமுறி (Indemnity Bond) அளித்த பின்னர் பிணை வைப்புத்தொகை விடுவிக்கப்படும்.

33. ஒப்பந்ததாரர், ஒப்பந்த வாகனத்தை ஒன்றியத்தின் அனுமதியின்றி திடீரென்று வாபஸ் பெற்றால் அல்லது நிறுத்தி விட்டால்,

அ. பிணை வைப்புத் தொகை முழுவதும் முடக்கப்படும்

ஆ. அவ்வாறு நிறுத்தப்படும் வரை உள்ள கடைசி 15 நாள் போக்குவரத்துக் கட்டணம் விடுவிக்கப்பட மாட்டாது.

இ. மாற்று வாகன ஒப்பந்த விதிப்படி அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டணத்தை விட அதிகமாக ஒன்றியத்தால் செலவிடப்பட்டிருந்தால், ஒப்பந்ததாரரின் நிலுவையில் உள்ள போக்குவரத்துக் கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். அதையும் விட அதிக செலவினங்களுக்கு ஒப்பந்ததாரரின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மூலம் வசூல் செய்யப்படும்.

34.ஒப்பந்ததாரர், ஒப்பந்த காலத்தில், தானாக ஒப்பந்தத்தை ரத்து செய்து வாகனம் இயக்கப்படாமல் ஏற்படும் இழப்பிற்கோ அல்லது, வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இயற்கை சீற்றம் போன்ற எதிர்பாராத காரணங்களினால் வாகனம் இயக்கப்படாமல் போனாலோ, ஒன்றியத்திடமிருந்து எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

டெண்டர்தாரர் கையொப்பம்

**35.**உதிரிப் பாகங்கள் விலை உயர்வு, மற்றும் டயர் விலை உயர்வு, வரி உயர்வு போன்ற விலை உயர்வுகள் ஏற்பட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட வாடகை விகிதம் உயர்த்தித் தரப்பட மாட்டாது.

**36.**ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும், ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களை **EPF & ESI** திட்டத்தில் சேர்த்து, மாதாந்திர **Premium** தொகையினை ஒப்பந்ததாரரின் **EPF / EDLI / ESI** திட்டத்தில் ஒதுக்கப்பட்ட கணக்கில் மாதாந்திர பிரிமியம் தொகையினை **SBI** வங்கியில் செலுத்தியதற்கான ரசீதினை மாதந்தோறும் **(2nd Fortnight)**போக்குவத்து கட்டண பட்டியல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகுதான் போக்குவரத்துப் பட்டியல்கள் **EPF & ESI** செலுத்தியதற்கான ரசீதினை சமர்ப்பிக்கப்படவில்லையெனில் போக்குவரத்து பட்டியல்கள் விடுவிக்கப்படமாட்டாது.

**37.**ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் டிரைவர்–கிளீனர் ஆகியோர் மூலம் ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் எந்தஒரு பொருளோ ட்ரக் ஸ்லிப், ஒப்புதல் கடிதம், பால்பண பட்டுவாடா பட்டியல் முதலியமைகளுக்கு ஒப்புதல் அளித்து தவறாமல் சம்பந்தப்படட அலுவலரிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதே போல் சங்கததிடமிருந்து ஒன்றியத்திற்கு அனுப்பப்படும் அனைத்துக்கும் ஒப்புதல் வழங்கி தவறாமல் கொண்டு சோக்க வேண்டும். வாகன டிரிப்ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிகார்டுகளை ஒபபந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும். ஒன்றியம் எந்த பொறுப்பையும் ஏற்காது.

**38.**ஒப்பந்த காலத்தில் பால் கேன்களோ அல்லது கேன் மூடிகளோ தொலைத்து விட்டால் அவற்றின் கிரயத் தொகை எதிர்வரும் போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

**39.**அங்கீகரிக்கப்பட்டஒப்பந்தத்தைபொது மேலாளர், வேலூர்–மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிட்., எந்தவித காரணமும் காட்டாமல் 15 நாள் முன்னறிவிப்பு செய்து ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். அவ்வாறு ஒன்றிய நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்போது அவ்வழித்தடத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா சங்கங்களிடமிருந்து பாக்கியில்லா சான்று (No DueCertificate) பெறப்பட்டு 30 நாட்களுக்கு பின்னர் ஈட்டுறுதி பிணைமுறி (Indemnity Bond)அளித்த பின்னர் பிணை வைப்புத்தொகை முழுவதும் விடுவிக்கப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**40.ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும் போது அனுமதிக்கப்பட்ட விகிதாச்சார அடிப்படையில் போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ முழு உரிமை உண்டு.**

41.ஒப்பந்ததாரர் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வங்கிக் கணக்கு எண்ணை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். போக்குவரத்துக் கட்டணம் அவரது வங்கிக் கணக்கில் 15 நாட்களுக்கு ஒரு முறை இருசால் செய்யப்படும்.

42.ஒப்பந்ததாரர் தனது பெயரில் PAN CARD NUMBER வாங்கி அதன் எண்ணை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

**43.மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் 1998–ம் ஆண்டு சட்டம் 43 (act) மற்றும் அதைத்தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்குட்பட்டதாகும்.**

**44.நீதிமன்ற வழக்குகள் வேலூர் மாவட்டம், வேலூருக்கு உட்பட்டது.**

**45.ஒப்பந்த விதிகளை தேவைப்படும் போது அதிகப்படுத்தவோ, குறைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.**

**46.மேற்படி பால் சேகர வழித்தட வாகன ஒப்பந்த நிபந்தனைகள் அனைத்தும் புத்தி சுவாதினத்துடனும், சுய நினைவுடனும் ஏற்று ஒப்புதல் அளிக்கிறேன்.**

47.போக்குவரத்து வாடகை கட்டணம் குறிப்பிடப்படும் போது ஒரு கி.மீ.க்கு என (சுங்க வரியும் (**Toll Fee**) சேர்த்து) குறிப்பிட வேண்டும். சுங்கவரி தனியாக வழங்கப்படமாட்டாது.

48. ஒன்றிய செலவில் அனைத்து வாகனங்களிலும் GPS கருவி பொருத்தப்படும்.இக்கருவிக்கு சேதாரம் ஏற்பட்டால் அதற்குண்டான பணத்தை ஒப்பந்த்தாரிடம் வசூல் செய்யப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

புதியது -தூயது-சுகாதாரமானது

**பால் சேகரிப்பு குழு பணி க்காக வானங்கள் இயக்க ஒப்பந்தம் (TEAM TAXI)**

தொழில்நுட்ப படிவம் –TECHNICAL BID

# டெண்டர் நாள்: 24.5.2022

இப்படிவம் திரு. / திருமதி ________________________ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

டெண்டர் நாள்: 24.5.2022

வரைவோலை **.எண்.:** **நாள்:**

டெண்டர்தாரர் டெண்டர்பாரம் பூர்த்தி செய்யப்படும் போது கவனிக்கப்பட வேண்டியவை

# கவர் A

## தொழில் நுட்ப படிவம் (2022–2024) (Technical Bid)

டெண்டரின் தொழில்நுட்ப படிவத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும். மற்றும் விபரங்கள் வழித்தடத்தின் பெயர் முதலியவற்றை கவனமாக குறிப்பிடப்பட வேண்டும்.

1. டேவணித்தொகை செலுத்திய விபரம் – டிடி ஒரிஜினல்
2. புகைப்படம் – டெண்டர்தாரரின் புகைப்படன் ஒட்டப்பட வேண்டும்.
3. ஆர்.சி. புத்தகம் – நகல்
4. இன்சூரன்ஸ் சான்று – நகல்
5. பெர்மிட் – நகல்
6. சாலை வரி – நகல்
7. எஃப்.சி விபரம் – நகல்

இவற்றில் ஏதேனும் இணைக்கப்படவில்லை என்றாலோ அல்லது மாற்றி இணைக்கப்பட்டிருந்தாலோ கண்டிப்பாக தொழில்நுட்ப படிவ நிலையிலேயே டெண்டர் தகுதி இழந்து விடும்.

# தொழில் நுட்ப விபரப் படிவம்
# (TECHNICAL BID)

1. டெண்டர்தாரர் பெயர் மற்றும் :
விலாசம் தொலைபேசி எண்

2. டேவணித் தொகை செலுத்திய விபரம்

A. வரைவோலை எண் :

B. வங்கியின் பெயர் :

C. சலான் எண். :

D. தேதி :

3. டெண்டர் மேறபெ காள்ளும் தடத்தின் பெயர் :
4. வண்டியின் விபரம் (கார்) :

5. வண்டியின் பதிவு எண் :

6. வண்டி தயாரிக்கப்பட்ட வருடம் மற்றும் மாடல் :

7. எஞ்சின் எண் :

8. சேசிஸ் எண் :

9. கொள்ளளவு :

அ. பளுவுடன் :

ஆ. பளு இல்லாமல்

:



10. காப்படுீ விபரம் (Insurance) :

11. சாலை வரி செலுத்திய தேதி விபரம் :

12. வண்டியின்உரிமம்எதுவரைபெறப்பட்டுள்ளது(Permit) :

13. காலாவதியாகும்தேதி விபரம் :

14. தகுதிச் சான்றிதழ் எந்த தேதி வரை :
(F.C)பெறப்பட்டுள்ளது

15. பணியாளர்களின் பிற்கால சேமநிதி (EPF) அலுவலக கணக்கு எண் :

16. பணியாளர்களின் காப்புறுதி திட்ட
(ESI)அலுவலக கணக்கு எண் :

குறிப்பு :- ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களை **EPF & ESI** திட்டத்தில் சேர்த்து, மாதாந்திர **Premium** தொகையினை ஒப்பந்ததாரரின் **EPF / EDLI / ESI** திட்டத்தில் ஒதுக்கப்பட்ட கணக்கில் மாதாந்திர பிரிமியம் தொகையினை **SBI** வங்கியில் செலுத்தியதற்கான ரசீதினை மாதந்தோறும் **(2nd Fortnight)**போக்குவரத்து கட்டண பட்டியல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகுதான் போக்குவரத்துப் பட்டியல்கள் விடுவிக்கப்படும் . **EPF & ESI** செலுத்தியதற்கான ரசீதினை சமர்ப்பிக்கப்படவில்லையெனில் போக்குவரத்து பட்டியல்கள் விடுவிக்கப்படமாட்டாது.

இத்துடன் இணைக்கப்பட வேண்டியவை:-

1. ஆர்.சி. புத்தகம் சிராகஸ்
2. இன்சூரன்ஸ் சான்று
3. பெர்மிட்( Permit)
4. சாலை வரி
5. எ.்.ப்.சி. விபரம்
6. டேவணித் தொகை செலுத்திய சலான்

டெண்டர்தாரர்கையொப்பம்

புதியது -தூயது-சுகாதாரமானது

**பால் சேகரிப்பு குழு பணி (TEAM TAXI) வழித்தடம்**

வணிக படிவம் –B (COMMERCIAL BID)

# டெண்டர் நாள்: 24.5.2022

இப்படிவம் திரு. / திருமதி ______________________________ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

டெண்டர் நாள்: 24.5.2022

வரைவோலை .எண்.: நாள்:

## பால் சேகரிப்பு குழு பணி (TEAM TAXI) வழித்தடம்வணிக படிவம்

## (Commercial Bid)டெண்டர் – (2022–2024)

| | | |
|---|---|---|
| 01 | டெண்டர்தாரரின் பெயரும் முகவரியும் (தொலைபேசி எண்ணும்) | |
| 02 | டெண்டர் மேற்கொள்ளும் தடத்தின் பெயர் | |
| 03 | டெண்டர் கோரும் வழித்தடத்தின் தூரம் கி.மீ. (மாதமொன்றுக்கு) | |
| 04 | ஒரு கிலோ மீட்டருக்கான விலைப்புள்ளி )<br>(சுங்கவரி உட்பட) | ரூ. பை.<br><br>(எழுத்தால் |
| 05 | டெண்டர் விதிகளை ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டுள்ளேன். | |

குறிப்பு . எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்ட விலைப்புள்ளியில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் இதில் எது குறைவானதோ அதுவே பரசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**பால் சேகரிப்பு குழு பணி (TEAM TAXI)வழித்தடத்தின் விபரங்கள்(2022–24)**

| வ. எண் | வழித்தடங்களின் விபரங்கள் (பால் சேகரிப்பு குழு) | தூர அளவு கி.மீ.(மாதம் ஒன்றுக்கு) | "T " Board தேவைப்படும் வாடகை வாகனம் | வாகன மாடல் |
|---|---|---|---|---|
| 1 | துணை பொது மேலாளர் (களப்பணி)பொறுப்பு | 3500 (Per month) | 2014 and above MODEL TAXI | நல்ல நிலைமையில் உள்ள வாகனம் |
| 2 | Scheme/AICentre (Taxi) | 2500 | 2014 and above MODEL TAXI | நல்ல நிலைமையில் உள்ள வாகனம் |
| 3 | பால் சேகரிப்புக்குழு வாகனம், வேலூர் | 3000 | 2014 and above MODEL TAXI | நல்ல நிலைமையில் உள்ள வாகனம் |
| 4 | பால் சேகரிப்புக்குழு வாகனம், ஆம்பூர் | 3000 | 2014 and above MODEL TAXI | நல்ல நிலைமையில் உள்ள வாகனம் |
| 5 | ஆம்பூர் மருத்துவ வழித்தடம் | 3000 | 2014 and above MODEL TAXI | நல்ல நிலைமையில் உள்ள வாகனம் |

**2022-2024 வரையிலான ஒப்பந்த காலத்திற்கான பால் சேகரிப்புக்குழு பணி வாகனங்கள், துணை பொது மேலாளர்: பால் கொள்முதல் பிரிவு வாகனம் மற்றும் மருத்துவ வழித்தட வாகனங்களுக்கான ஒப்பந்த விதிகளும் நிபந்தனைகளும்:**

1. ஒப்பந்தக் காலம் 2022 முதல் 2024 வரையிலான காலம் ஆகும். ஆனால், ஒப்பந்தக் காலம் காலாவதி ஆன பின்னரும் அடுத்த ஆண்டிற்கான வாகன ஒப்பந்தம் இறுதி செய்யும் வரை அல்லது ஆறு மாதம் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை மேற்படி ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

2. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட தனது ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே ரூ.11/– (ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி தன்னை இவ்வொன்றியத்தின் இணை உறுப்பினராக இணைத்துக் கொள்ள வேண்டும். (இத்தொகை திருப்பித் தரத்தக்கது அல்ல.) அவர் இவ்வொன்றிய தேர்தலில் வாக்கு அளிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ உரிமை இல்லை.

3. ஒப்பந்ததாரர், ஒப்பந்தம் வழங்கப்பட்ட 10 தினங்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியாக ரூ. 80/– (ரூபாய் எண்பது மட்டும்) மதிப்பிற்கான

பத்திரத்தில் ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர், ஒப்பந்தப் பத்திரம் கொடுத்த பின்னரே முதல் போக்குவரத்துப் பட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

4. ஒப்பந்ததாரர் டாக்சிகளுக்கு செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகை ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். ஒப்பந்த அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஒவ்வொரு தடத்திற்கு தனித் தனியே பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் படிவத்துடன் பொது மேலாளர் வே. மா. கூ. பா.உ.ஒன்றியம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ.5,000/– முன்வைப்புத் தொகையும் மீதியுள்ள தொகை ரூ. 5,000/– ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் கேட்பு வரைவோலை (Demand Draft) (அ) வங்கி காசோலை (Bankers Cheque) மூலமாக ஒன்றியத்தில் செலுத்த வேண்டும்.

5. பிணை வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் தரப்பட மாட்டாது.

6. ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒப்பந்த சட்ட திட்டங்களை (Terms and conditions) முழுமையாகவோ, ஏதாவது ஒரு விதியையோ பின்பற்றத் தவறி அதனால் ஒன்றியத்திற்கு இழப்புகள் ஏற்பட்டால் பிணை வைப்புத் தொகை முழுமையாக முடக்கப்பட்டு திரும்ப வழங்கப்பட மாட்டாது.

7. ஒப்பந்த வாகனமும் அதில் பணிபுரியும் ஊழியர்களும் மோட்டார் வாகனச் சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு இருக்க வேண்டும்.

8. ஒன்றிய ஒப்பந்த விதிமுறைகளை ஒப்பந்ததாரர் பின்பற்றாமல் செயல்பட்டாலும், ஒன்றிய மற்றும் சங்கச் சொத்துகளுக்கு சேதம் மற்றும் இழப்பு ஏற்படுத்தினாலும் முன்வைப்புத்தொகையில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ நட்டத்திற்காக ஈடு செய்யப்படும். மேலும் உடனடியாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஒன்றியத்திற்கு அதிகாரம் உள்ளது.

9. ஒப்பந்ததாரர், ஒன்றியம் அங்கீகரித்துள்ள தடத்தின் வழியிலும் / ஒன்றிய அலுவலரால் சுட்டிக்காட்டப்படும் வழியிலும் மட்டுமே டாக்சியை ஓட்ட வேண்டும்.

10. மோட்டார் வாகன சட்டத்திற்கு உட்பட்டு தேவைப்படும் ஆவணங்கள், டிரிப்சீட் பராமரிப்பு மற்றும் அனைத்திற்கும் ஒப்பந்ததாரரோ முழு பொறுப்பாகும். எவ்வித மேல் நடவடிக்கைகளுக்கும் ஒன்றியம் பொறுப்பாகாது.

11. ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும் போது அனுமதிக்கப்பட்ட விகிதாச்சார அடிப்படையில் போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ முழு உரிமை உண்டு.

12. உதிரி பாக விலை உயர்வு, டயர்விலை உயர்வு, வரி உயர்வு ஆகிய விலை உயர்வுகள் ஏற்பட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட வாடகை உயர்த்தித்தரப்பட மாட்டாது.

13. ஒப்பந்ததாரருக்கும் சங்கங்களுக்கும் ஒன்றியத்திற்கும் இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கு பொது மேலாளரின் தீர்ப்பே இறுதியானது.

14. நீதிமன்ற வழக்குகள் வேலூர் மாவட்டம், வேலூருக்கு உட்பட்டது,

15. டாக்சி முழு காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்,

16. அமலில் உள்ள விதிகளின்படி வருமானவரி ஒவ்வொரு போக்குவரத்துக் கட்டண பட்டியலிலும் பிடித்தம் செய்யப்படும்.

17. போக்குவரத்துக் கட்டண பட்டியல் ஒப்பந்ததாரர் 1 முதல் 15ம் தேதி வரை, 16ம் தேதி முதல் 31 மாத இறுதி வரை ஆக மாதமிருமுறை மூன்று நகல்கள் தயாரித்து உரிய அலுவலர் பரிந்துரையுடன் 5 தினங்களுக்குள் ஒன்றியத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

18. பொது வேலைநிறுத்தம் நடைபெறும் நாட்களில் ஒப்பந்ததாரருக்கு எவ்வித இழப்பு ஏற்பட்டாலும், ஒன்றியத்தின் மூலம் எவ்வித ஈட்டுத் தொகையும் வழங்கப்பட மாட்டாது.

20. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை பதினைந்து நாட்கள் அவகாச கால முன்னறிவிப்பு கொடுத்து ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

21. ஒப்பந்தத்தில் இருந்து முன்னறிவிப்பு எதுவுமின்றி திடீரென டாக்சியை நிறுத்தி விட்டால், ஒன்றிய ஒப்பந்த விதிமுறை ஒப்பந்ததாரர் செயல் படுத்தாமைக்காக ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டாலும் கீழ்க்காணும் முறைகள் பின்பற்றப்படும்.

அ. பிணை வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்பட்டு ஒன்றிய கணக்கில் சேர்க்கப்படும்.

ஆ. கடைசி போக்குவரத்துக்கட்டண வாடகை காசோலை விடுவிக்கப்பட மாட்டாது.

இ. மாற்று வாகனம் ஏற்பாடு செய்த வகையில் ஒன்றியத்திற்கு ஏற்படும் அதிகப்படியான செலவு முழுவதும் ஒப்பந்ததாரரின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும்.

22. டாக்சியில் வேகமானி கருவி (Speedo Meter) சரியாக இயங்க வேண்டும். தொலைவு காட்டும் கருவி இயங்காத நிலையில் டாக்சியில் பயணம் செய்யும் அலுவலரால் தெரிவிக்கப்படும் தொலைவின் அடிப்படையில் மட்டுமே போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படும்.

23. ஒப்பந்தம் செய்யப்பட்ட டாக்சியில் ஒன்றிய பால் சேகரிப்புக்குழு பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் பால்பண்ணை தொடர்பான அனைத்து பொருட்களையும் ஒப்பந்ததாரர் எவ்வித நிபந்தனையும் இன்றி ஏற்றிச் செல்ல வேண்டும்.

24. ஒன்றிய அலுவலர் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிடும் நேரத்தில் ஒப்பந்ததாரர் டாக்சியை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தவறினால் தண்டத்தொகை ரூ.75/– விதிக்கப்பட்டு வாடகையில் வசூல் செய்யப்படும். மேலும் மாற்று வாகனம் அமர்த்தப்பட்டு அதே பணிக்காக பயன்படுத்தப்படும். மாற்று வாகனத்திற்காக செலவிடப்பட்ட அதிகப்படியான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

25. ஒப்பந்த டாக்சி பழுதடைந்தாலோ, விபத்திற்குள்ளானாலோ, தகுதி சான்று பெறவேண்டி இருந்தாலோ, ஒப்பந்ததாரர் தம் பொறுப்பில் மாற்று வாகனம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

26. ஒப்பந்ததாரர் அங்கீரிக்கப்பட்ட வாகனத்தை மட்டும் தான் இயக்க வேண்டும். முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட மாட்டாது. முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்கப்படுமாயின் நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் அபராதத் தொகை வசூலிக்கப்படும். தவிர்க்க இயலாத காரணங்களான விபத்து, தகுதிச் சான்று பெறுதல் போன்ற சமயங்களில் ஒன்றியப் பொது மேலாளரின் முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்படும். மாற்று வாகனம் அல்லது மாற்று ஏற்பாடாக கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படும்.

அ. ஒப்பந்த வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் அவருடைய பெயரில் உள்ள மாற்று வாகனம் ஒன்றிய அனுமதி பெற்று இயக்க அனுமதிக்கப்படும்.

ஆ. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் இறக்கும் பட்சத்தில் அவரின் சட்டபூர்வமான வாரிசுதாரர் வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதிக்கப்படும்.

இ. இயக்கப்படும் வாகனம் ஒப்பந்ததாரரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரின் பெயரில் இருக்க வேண்டும்.

ஈ. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக்காலத்தில் இறக்கும்பட்சத்தில் அவரின் சட்டபூர்வ வாரிசுதாரர் வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதிக்கப்படுவார்.

27. ஒப்பந்த வாகனம், விபத்து ஏற்பட்டு இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின், வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அத்தாட்சிக் கடிதம் பெற்று ஆர்.சி., தமிழ்நாடு பர்மிட் மற்றும்

இன்சூரன்ஸ் தனது பெயரில் இருப்பின் அங்கீரிக்கப்பட்ட கொள்ளளவு உடைய மாற்று வாகனத்தை ஒன்றியத்தின் முன் அனுமதியுடன் இயக்கலாம்.

அ. இயக்கப்படும் வாகனம் ஒப்பந்ததாரரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரின் பெயரில் இருக்க வேண்டும்.

**28.**ஒன்றிய பணிக்காக டாக்சி ஓடிக்கொண்டிருக்கும்போது, டாக்சியில் வெளி ஆட்களையோ ஒன்றியம் அனுமதிக்காத பொருட்களையோ ஏற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் அன்றைய வாடகை ரத்து செய்யப்படும்.

**29.**ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும், ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களை **EPF & ESI** திட்டத்தில் சேர்த்து, மாதாந்திர **Premium** தொகையினை ஒப்பந்ததாரரின் **EPF / EDLI / ESI** திட்டத்தில் ஒதுக்கப்பட்ட கணக்கில் மாதாந்திர பிரிமியம் தொகையினை **SBI** வங்கியில் செலுத்தியதற்கான ரசீதினை மாதந்தோறும் **(2nd Fortnight)** போக்குவத்து கட்டண பட்டியல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகுதான் போக்குவரத்துப் பட்டியல்கள் விடுவிக்கப்படும். **EPF & ESI** செலுத்தியதற்கான ரசீதினை சமர்ப்பிக்கப்படவில்லையெனில் போக்குவரத்து பட்டியல்கள் விடுவிக்கப்படமாட்டாது.

**30.** முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட்டாலும் இதர நிபந்தனைகள் பொருந்தும். மாற்று வாகனம் இயக்க அதிக பட்சமாக **30** நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

**31.** வாகன ஒப்பந்ததாரர் விண்ணப்பிக்கும்போது அத்தடத்தில் தேசிய நெடுஞ்சாலை சுங்கவரிக் கட்டணம் இருக்குமாயின் அதற்கான கட்டணத்தை விலைப்புள்ளியுடன் சேர்த்து அளித்தல் வேண்டும்.

32 போக்குவரத்து வாடகை கட்டணம் குறிப்பிடப்படும் போது ஒரு கி.மீ.க்கு (சுங்க வரியும் (**Toll Fee**) சேர்த்து) என குறிப்பிட வேண்டும். சுங்கவரி தனியாக வழங்கப்படமாட்டாது.

33.அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை பொது மேலாளர், வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிட்., எந்தவித காரணமும் காட்டாமல் **15** நாள் முன்னறிவிப்பு செய்து ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். அவ்வாறு ஒன்றிய நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்போது அவ்வழித்தடத்தின் பாக்கியில்லா சான்று (No Due

Certificate) பெறப்பட்டு **30** நாட்களுக்கு பின்னர் ஈட்டுறுதி பிணைமுறி (Indemnity Bond) அளித்த பின்னர் பிணை வைப்புத்தொகை முழுவதும் விடுவிக்கப்படும்.

**34.**ஒப்பந்தக்காலம் முடிவடைந்ததுடன் ஒப்பந்தம் சார்ந்துள்ள அலுவலரிடம், பாக்கியில்லா சான்றுகள் (No Due Certificate) அளித்த பின்னர் கடைசி போக்குவரத்து பட்டியல் விடுவிக்கப்படும். மேலும், ஆறு மாதம் கழித்த பின்பு ஈட்டுறுதி பிணைமுறி (Indemnity Bond) அளித்த பின்னர் பிணை வைப்புத்தொகை விடுவிக்கப்படும்.

**35.**ஒப்பந்ததாரர் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வங்கிக் கணக்கு எண்ணை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். போக்குவரத்துக் கட்டணம் அவரது வங்கிக் கணக்கில் 15 நாட்களுக்கு ஒரு முறை இருசால் செய்யப்படும்.

**36.** ஒப்பந்ததாரர் தனது பெயரில் PAN CARD NUMBER வாங்கி அதன் எண்ணை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

**37.**மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் **1998**–ம் ஆண்டு சட்டம் **43** (Act) மற்றும் அதைத் தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்குட்பட்டதாகும்.

**38**.ஒப்பந்த விதிகளை அதிகப்படுத்தவோ, குறைக்கவோ, மாற்றியமைக்கவோ ஒன்றியப் பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உள்ளது

**39**.மேற்படி விநியோக வாகன ஒப்பநத் நிபந்தனைகள் அனைத்தையும் புத்திசுவாதீனத்துடனும்,சுயநினைவுடனும் ஏற்று ஒப்புதல் அளிக்கிறேன்.

டெண்டர்தாரர் கையொப்பம்

## கீழ்கண்ட உறுதி மொழிகளை ஏற்றுக்கொண்டு கீழே கையொப்பம் இட்டுள்ளேன்

அனுப்புநர்

பெறுநர்

பொது மேலாளர்,
வேலூர்-மாவட்டகூட்டுறவுபால்
**உற்பத்தியாளர்கள்** ஒன்றியம் லிட்,
வேலூர்-9

1. டெண்டர் திறக்கும் தேதியன்று சம்பந்தப்படட் வண்டியின் ஆர்.சி.மற்றும் தஸ்தாவேஜ்களை காண்பிகக சம்மதிக்கிறேன். மேலும் இரண்டு செட் போட்டோ நகல் சமர்ப்பிக்கின்றேன்.

2. ஆர்.சி. புத்தகமும் வண்டியில் எனது பெயரிலேயே உள்ளது. இதில் எவ்வித வில்லங்கமும் இல்லையென உறுதி கூறுகிறேன்.

3. பால் சேகரிப்புக்குழு, துணை பொது மேலாளர், பால் கொள்முதல் பிரிவு விவகார எல்லை மற்றும் மருத்துவ வழித்தடத்தை நன்கு பார்வையிட்ட பின்னரே டெண்டரில் கலந்து கொண்டேன்

4. டெண்டரில் சேர்த்திட்ட டாக்சி நல்ல முறையில் உள்ளது என உறுதி கூறுகிறேன்.

5. இதில் பிறரின் தலையீடு எதுவும் இல்லை என உறுதியளிக்கிறேன்.

6. 2021-2022 ஒரு ஆண்டிற்கு இரட்டை கவர் முறை டெண்டர் என்பதை அறிந்துகொண்டேன். இம்முறையின்படி முதன்மை படிவமாக தொழில்நுட்ப படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதையும் அதற்கான அனைத்து இணைப்புகளும் சரியாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே இரண்டவது படிவமான டெண்டர் விலைப்புள்ளி படிவம் பரிசீலனை செய்யப்படும் என்பதையும் அறிந்து கொண்டேன்.

இப்படிவத்தை நானே எனது சுயநினைவோடு பூர்த்தி செய்து கையொப்பம் இட்டுள்ளேன்.

டெண்டர்தாரர் கையொப்பம்.